## ரொறன்ரோ சமூகவளத் தொடர்புகள் (சீஆர்சீரீ-CRCT)

மிகப்பாரதூரமான உளநலப் பிரச்சினைகள் உள்ள 16 வயதிற்கு மேற்பட்டவர்கள் சமூகத்தில் மரியாதையுடனும் மனநிறைவுடனும் வாழ்வதற்கு சீஆர்சீரீ பல வழிகளிலும் ஆதரவு வழங்குகிறது.

மதிப்பு, தெரிவுச் சுதந்திரம், நம்பிக்கை, உறுதி கொள்தல், பாவனையாளர்களால் வழிகாட்டல், இணைந்து செயற்படல், வாய்ப்புக்களை வழங்குதல், நீதி, நியாயம், சமத்துவம், ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டு நாம் செயற்படுகிறோம். உலகின் பல்வேறுபட்ட சமூக-பண்பாட்டு அநுபவங்களை உள்வாங்கி மிகப் பெறுமதியானதாகக் கொள்வதில் சீஆர்சீரீ மிகுந்த அக்கறை காட்டுகிறது. எங்கள் சேவையானது இனத்துவேசம், அடக்குமுறைகளுக்கு எதிரான செயற்பாடுகளைக் கொண்டது,

### எங்கள் சேவைத் திட்டங்கள்

- சமூக ஆதரவுச் சேவைகள் (கிழக்கு-மேற்கு குழுக்கள்), குடும்பச் செயல் திட்டம், சோமாலி, தமிழ்மொழிச் சேவைப் பணியாளர்கள்
- நல விருத்திச் செயல் திட்டம்
- விடுதி-வதிவிட அரவணைப்புச் சேவைத் திட்டம் (HOP) (பெண்களோடு பணிசெய்தல்)
- உளநல நீதிமன்ற உதவிச் சேவைகள்

### சமத்துவ சேவை

வீடற்ற நிலமை, குற்றச்செயல் தொடர்பான சட்டப் பிரச்சினை, இனம், பண்பாடு, இனக்குழுமம், பால்பகுப்பு, மொழி ஆகிய காரணங்களால் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் தடைகளை எதிர்நோக்கும் மக்களுக்கு எங்கள் நிறுவனம் பணியாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது.

சீஆர்சீரீ கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ரொறன்ரோப் பகுதியில் சேவையாற்றும் இலாபநோக்கற்ற, சமூக உளநல அறக்கொடை முகவர் நிலையமாகும்.

நாங்கள் உளநல அமைப்பைப் பயன்படுத்தும் 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு உதவியளிக்கிறோம். ஒன்ராறியோ சுகாதார-நெடு நாள் பராமரிப்பு அமைச்சு பிரதான நிதி உதவியை வழங்குகிறது. ரொறன்ரோ பெரும்பாக யுனைட்டட் வே, கனடிய பாரம்பரிய அமைச்சு, ரொறன்ரோ றொட்டரிக் கழகம், ஈஜேஎல்பி பவுண்டேசன், ஒன்ராறியோ றிறில்லியம் பவுண்டேசன், ரொறன்ரோ நகர சபை- சேவைபெறும் வழி, சமத்துவ நிதியளிப்பு ஆகியவற்றால் துணை உதவி நிதி வழங்கப்படுகிறது.

**அறக்கொடைப் பதிவு எண்:**
#118871128 RR0001

நன்கொடைகளை நன்றியுடன் ஏற்றுக்கொள்வோம்.

மேலதிக தகவல்களுக்கும் ரொறன்ரோப் பகுதிக்கான எங்கள் உதவிகள், வளங்கள், உளநல சேவைகள் பற்றிய முழுமையான வழிகாட்டிக்கும் www.crct.org இணையத் தளத்தைப் பார்க்கவும்.

Community Resource Connections of Toronto

366 Adelaide Street East, Suite 230 | Toronto, ON M5A 3X9
தொ.பே: (416) 482-4103 | தொ.ந: (416) 482-5237 | crct@crct.org

Community Resource Connections of Toronto

# சமூக உதவிச் சேவைகள் (CSS)



## சமூக உதவிச் சேவைகள் என்றால் என்ன (சீஎஸ்எஸ்)?

ரொறன்ரோப் பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றும் இலாபநோக்கற்ற உளநல முகவர் நிறுவனமான ரொறன்ரோ சமூக வளத் தொடர்புகளின் (சீஆர்சீரீ) ஒரு திட்டமே சமூக உதவிச் சேவையாகும்.

மிகப் பாரிய, நீண்ட காலம் நீடிக்கும் உளநோய்களால் நாளாந்த வாழ்வில் இன்னல்களை எதிர்நோக்கும் 16 வயதிற்கு மேற்பட்டோருக்கு உதவுகிறோம்.

## எங்கள் சேவைகள்

சமூக உதவிச் சேவைகள் உங்களுக்கு உதவும் வழிகள்:

- உணவு, வதிவிடம், உடை, சுகநலக் கவனிப்பு போன்ற அடிப்படைத் தேவைகளை நீங்கள் பெற்றுக்கொள்வதற்கும்
- உங்கள் சமூகத்தில் பங்காற்றுதல், செயற்பாடுகளை அறிந்துகொள்ளுதல், பொழுதுபோக்கு, வேலை, கல்வி போன்றனவற்றில் நீங்கள் மகிழ்ச்சியோடு பங்கு கொள்வதற்கும்
- உங்கள் குடும்பத்துடனும், உங்களுக்கு உதவி செய்வோர்களுடனும் (உங்கள் சம்மதத்துடன்) பணியாற்றுவதற்கும்
- நெருக்கடி நிலைமைகளைக் கையாளுவதற்கும்
- உங்கள் குறிக்கோள்களை அடைவதற்கான திறன்களைக் கற்பதற்கும்
- உங்களுக்குத் தேவையான சேவைகளுடனும் வளங்களுடனும் தொடர்புபடுத்தவும் உதவுகிறோம்.

ஆங்கிலம், தமிழ், சோமாலி, வேறும் பல மொழிகளில் சேவைகள் வழங்கப்படுகின்றன.

எங்கள் சேவைப்பிரதேசம் நோத்யோக்கின் கிழக்குப்பகுதி, ஸ்காபரோ, ரொறன்ரோவின் நடுப்பகுதியும் மேற்குப் பகுதியும் ஆகும்.

## எங்கள் சேவையைத் தொடர்புபடுத்தக் கோருதல்

உளநலப் பிரச்சினை தங்களுக்கு உண்டென உணரும் தனிப்பட்டவர்கள், அவர்களது குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்கள், மற்றும் வேறு சேவைகளை அவர்களுக்கு வழங்குபவர்கள் சேவைக்காக எங்களிடம் தொடர்புபடுத்தக் கோரலாம். அவர் எங்கள் செயற் திட்ட விதிகளுக்கு உட்பட்ட சேவைத் தேவை உடையவராகவும் கட்டுக்கோப்பான நீண்ட கால சமூக உதவி தொடர்ந்து தேவைப்படுபவராகவும் இருத்தல் வேண்டும்.

எங்கள் சேவை உங்களுக்குப் பொருத்தமற்றதாக இருந்தால், உங்களுக்குத் தேவையான மிகப் பொருத்தமான செயல் திட்டத்தை இந்த நகரத்திற்குள்ளேயே நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் முயற்சி செய்வோம். சிலருக்கு சேவைகளைத் தொடர்புபடுத்துவதில் சிக்கல்கள் உண்டு என்பதனை நாம் அறிவோம். உங்களுக்காக ஒரு செயல் திட்டத் தொடர்பினை விருத்திசெய்து கொள்வதற்காக உங்களுக்கு உதவ நாங்கள் தயாராக உள்ளோம்.

எங்களுடன் தொடர்புபடுத்துவதற்காக எங்கள் உட்சேர்ப்பு (intake) இணைப்பாளரை அழையுங்கள்: (416) 482-4103 இணைப்பு 316

உட்சேர்ப்பு வேலை ஆங்கிலம், சோமாலி, தமிழ் ஆகிய மூன்று மொழிகளில் நடைபெறுகிறது.

## எங்கள் நோக்குகளும் பெறுமதிகளும்

- உளநலப் பிரச்சினைகள் உள்ளவர்கள் குணமடையக்கூடியவர்கள். அவர்கள் இயல்பு நிலைக்கு மீண்டும் வரமுடியும் என்பதையும் அறிவோம்.
- நாங்கள் கொடுக்கும் சேவைகள் இலவசமானவை. உங்களின் நோக்குகளை அடைவதற்கு உங்களுடன் இணைந்து பணியாற்றுகிறோம்.
- நீங்கள் சுயமாக முடிவு செய்வதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுத்தர நாங்கள் உதவுவோம்.
- நம்பிக்கை உணர்வையும் ஆற்றல்களையும் இனங்காணவும் மேலும் விருத்திசெய்வதற்கும் நாங்கள் உதவுகிறோம்.
- கருத்துவேறுபாடுகள் உண்டு எனினும் உங்களுக்கும் எங்களுக்கும் இடையே சுமுகமான உறவை நிலைநாட்டுவதற்காகவும் செயற்படுவோம்.
- தனிநபர் மட்டத்திலும், செயல் திட்ட, முகவர் மட்டத்திலும் உங்களுடைய கருத்தாழம் மிக்க பங்களிப்பை மதிக்கிறோம்; விரும்புகிறோம்.

## அந்தரங்கம் பேணல்

சீஆர்சீரீயில் உள்ள பணியாளர்கள், மாணவர்கள் தொண்டர்கள் அனைவரும் அந்தரங்கம் காக்கும் சத்தியப்பிரமாணம் ஒன்றில் ஒப்பமிடும்படி வேண்டப்படுவர். உங்கள் தனிப்பட்ட தகவல்களை பிரத்தியேகமாக வைத்திருப்பதோடு சட்டப்படி வேண்டப்பட்டாலன்றி உங்களுடைய சம்மதமின்றி அவற்றை எவருக்கும் வெளியிடமாட்டோம். எங்கள் அந்தரங்கம் காக்கும் கொள்கைகள் பற்றி மேலதிகமாக அறிந்துகொள்ள எங்களுடைய பிரசுரம் “சீஆர்சீரீயின் அந்தரங்கத்துக்கான கடப்பாடு” என்ற வெளியீட்டைப் பார்க்கவும். அல்லது செயல் திட்ட அந்தரங்கம் காக்கும் பணியாளரை (416) 482-4103 இணைப்பு 232 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

## ஆலோசனைகள்/முறையீடுகள்

உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும், ஏனையோருக்கும் மிகச் சிறந்த சேவைகளை (உங்கள் சம்மதத்தோடு) வழங்குவதற்கு எங்களை அர்ப்பணிக்கிறோம்.

உங்கள் ஆலோசனைகளை எந்த நேரமும் எங்களுக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறோம். எங்கள் சேவைகள் பற்றிக் குறைபாடு இருப்பின் அல்லது நீங்கள் எதையாவது பாராட்ட விரும்பினால் அதை – எங்களுக்கு அறியத்தாருங்கள். நீங்கள் நேரடியாகவே உங்கள் பணியாளருடன் அல்லது திட்ட முகாமையாளருடன் பேசமுடியும் அல்லது எங்களுக்குக் கடிதம் ஒன்றை எழுதலாம். உங்களிடமிருந்து வரும் கருத்தை நாங்கள் பெரிதும் மதிக்கிறோம்.

திட்ட முகாமையாளர்களை அணுகுவதற்கு, கிழக்குக் குழு: (416) 482-4103 இணைப்பு 239. மேற்குக் குழு: (416) 482-4103 இணைப்பு 238.